முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள் இன்று!

இந்தியாவிற்கே முன்னோடித் திட்டங்களை அளித்திட்ட பெருமகன்! இன்பத் தமிழ்நாட்டின் திருமகன்! ஏற்றமிகு சாதனைத் திட்டங்களை மறக்க முடியுமா?

தம் நாவினாலும், பேனாவினாலும், சமூக சீர்திருத்தத்திற்கு அடித்தளமிட்டு மாநிலத்தைக் கட்டமைத்தவர் கலைஞர் !

இந்தியாவில் தமிழ்நாட்டினை தலை நிமிரச் செய்தவர். தமிழ் மொழிக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றுத் தந்தவர். தமிழ்நாட்டின், தமிழ் மக்களின், தமிழ் மொழி யின் புகழை நாலுதிசையங்கும் ஒங்கச் செய்தவர். 5 முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்தவர் முத் தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டின் வரலாற்றினை எழுதக் கூடி யவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர் களின் பெயரை குறிப்பிடாமல் எழுதவிட் முடியாது.

திருக்குறளுக்குக்கோர் குரலோவியம். தொல் காப்பியத்திற்குக்கோர் தொல்காப்பியப் பூங்கா. சிலப்பதிகாரத்திற்குக்கோர் பூம்புகார். ஆன்மிகத் திற்குக்கோர் மதத்தில் புரட்சி செய்த மகான் இராம மாறுஅரசர். பகுத்தறிவுக்குக்கோர் பராசக்தி. வீரத் திற்குக்கோர் மந்திரிகுமாரி. மனோகரா. கழுகத்தின் உச்சிநுட்புடனுக்குக்கோர் "கலைஞர் கருணாநிதி" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழின் பெருமையை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கதுக்கிழத் திருநாளில் தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் உரிமையை மாநில முதலமைச்சர் களுக்குப் பெற்றுத் தந்தார் கலைஞர்.

இப்படி புகழுக்கு பெருமை சேர்க்கும் கலைஞர் அவர்கள், தமிழ்நாடுமை இந்தியா விலேயே முன்னோடி மாநிலமாக திகழ்வதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர்.

கலைஞர் தீட்டிய திட்டங்கள் கார் உள்ள வரை நம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும். இத்திட்டங்கள் அத்தனையும் இந்தியாவிற்கு; தமிழ்நாடிற்கு வழிகாட்டும் சொத்துக்கள்!

இத்திட்டங்கள் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில், மக்களின் உள்ளங்களில் பின்னி பிணைந்திருக்கின்றன.

அத்திட்டங்களை எடுத்துக் கூறுவது முடியுமா? இதோ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்த நாளான இன்று (3.6.2025) அத்திட்டங்களில் சிலவற்றை இங்கே வெளி யிடுவதில் பெருமையடைகின்றோம்.

அத் திட்டங்களின் தொகுப்பு இதோ:

1967 – 1969 பேருந்துகள் நாட்டுடைமை!

1967-ஆம் ஆண்டு முதன் முதலாக தி.மு.க. அரசு தமிழ்நாட்டில் அமைந் தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அமைச்சரவையில் பொதுப்பணித் துறை, போக்குவரத்துத்துறை அமைச் சராக கலைஞர் அவர்கள் இருந்த போது, நியாயமான கட்டணங்களில் சிறந்த முறையில் மக்களுக்கு போக்கு வரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டும், மக்கள் பயணம் செய்கிற பேருந்து போக்கு வரத்திலான நாட்டுடைமையாக்கும் கொள்கையை பேலும் விரிவுப்படுத்தி



குமரன் விழாவில் – குமரன் மாநாட்டுமாநிலம் மலைக் அருந்தமாகத் குமரிமுடிப்புகளாக தூற உயர்த்தியவர்.

லில் பெரிய பாலங்களைக் கட்டிய கலைஞர் அவர்கள் முதலில் திட்ட மிட்டார்.

திருவாரூர் ஆழித் தேர்!

தமிழகத்திலேயே மிகப்பெரிய தேர் என்பதால், அப்பர் சுவாமிகளால், ஆழித்தேர் எனப் புக ழாரம் சூட்டப்பெற்றது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருகுளா சம் பந்தர், திருநாவுக்கரசு அதியோர் இத் திருக்கோயில் தேர்த்திருவிழாவை நடத்தினார்கள் என்பது வரலாறு. இத்தகைய சிறப்புமிக்க தேர்த்திருவி ழாவானது 1945-ஆம் ஆண்டிற்குப் பின் 25 ஆண்டு காலம் நடைபற வில்லை.

திருவாரூர் ஆழித்தேர், திருச்சியில் உள்ள பெல் நிறுவனத்தின் மூலம் பெருமளவு மாற்றம் செய்யப்பட் டது. புதிய இரும்புச் சக்கரங்களும், அச்சுகளும் அதில் பொருத்தப்பட் டன. சக்கரம் சுழல்வதைக் கட்டுப் படுத்த ஹைட்ராலிக் பிரேக் முதலி யவை பொருத்தி நவீனப்படுத்தப்பட்டது.

இப்படி செப்பனிடப்பட்ட பின் ஆரூரின் ஆழித்தேர் திருவிழா 28.4.1970 அன்று மீண்டும் கீழும் நிலப் புமாக நடைபெற்றது என்பது தமிழ் நாட்டின் வரலாற்றில் குறிப்பாக

இந்தியாவிலேயே முத்தமிழறிஞரை பெருமைமிகு அண்ணா பெருமகனாக அமைத்தவர் கலைஞர்.

ஆண்மிக வரலாற்றில் கலைஞர் உரு வாக்கி திருவாரூர் விநிகளில் ஓட விட்ட ஆழித்தேர். இன்றும் உலகள வில் பிரசித்தி பெற்றத் தேராக விளங்கிக் கொண்டிருக்கிறது.

1971 - தொழு நோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம்!

1971ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாள் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்த நாளை தொழு நோய் பிச்சைக்காரர் நலவாழ்வு நாள் என அறிவித்து அவர்களுக்கு வாழ்வளிக்க மாவட்டந்தோறும் விடுதிகள் கட்டு வதற்கான திட்டங்களைத் தீட்டி னார். எல்லா மாவட்டங்களிலு முள்ள அந்த விடுதிகளில் சுமார் நாலாயிரம் தொழு நோய்ப் பிச்சைக் காரர்கள் தங்கள் பெண்டு பிள்ளை களுடன் வாழ்வதற்கு ஏற்பாடு செய் தார்.

1972 - கண்ணொளி வழங்கும் திட்டம்!

1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாள் 49-வது பிறந்த நாள் விழாவை யொட்டி, நகராங்களில் வாழும் ஏழை எளியோர், கிராமங்க ளில் வாழும் ஏழை எளியோர் மட்டு மல்ல, நடுத்தரவர்க்கத்தினர் கூட, தங்களின் கண்ணொளி பாதிக்கப் படுமேயானால், அதற்கேற்ற சிகிச்சை பெற்று புத்தொளி பெற்றிட முடியாத அளவுக்கு இருந்திட்ட நிலை இருந்தது.

ஏழை எளியோர் இருக்கும் கிரா மப்புறம் தேடிச்சென்று கண் டாக் டர்கள் புடைசூழ பொரிய அளவில் முகாம்களை அமைத்து ஒவ்வொரு முகாமிலும் சுமார் ஆயிரம் பேருக்கு குறையாமல் பல்வேறு விதமான கண்நோய்க ளுக்குச் சிகிச்சையளித்த தோடு கேட்ராக்ட் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டு, அவர்களுக்கு அந்த முகாம்களில் ஒரு வாரம் தங்குவதற் குப் போதுமான வசதிகளும் வழங் கப்பட்டு இப்பட்டிநூற்றுக்கணக்கான முகாம்களில் லட்சக்கணக்கான மக் கள் கண்ணொளி கிடைக்கப் பெற்று இரும்பினார்கள். இத் திட்டம் மூலம் இலட்சக்கணக்கான ஏழை எளிய மக் கள் கண்ணொளி பெற்றதோடு கலைஞர் அவர்களாலாள்.

1973 கை ரிக்சா ஒழிப்பு!

சென்னை போன்ற பல்வேறு நக ரங்களிலும் ஏறத்தாழ இரண்டாயி ரம் கைரிக்சாக்கள் இருந்தன. கலை ஞரின் ஐம்பதாவது பிறந்த நாளின்போது அந்தக் கைரிக்சாக்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு, அந்தக் கைரிக்சா தொழிலாளிகளுக்கு இலவ சமாக சைக்கிள் ரிக்சா வழங்கப்படு மென அறிவிக்கப்பட்டது. அந்த அறி விப்பு உடனடியாக நடைமுறைப்படுத் தப்பட்டது. உரிய நஷ்டஈடு தரப் பட்ட எல்லா கைரிக்சாக்களையும் அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டது. அந்தக் கைரிக்சாக்களை மாடுபோல் இழுத்து வயிறு கழுவி வந்த தொழி லாளிகளுக்கு அரசாங்கம் இலவச மாக சைக்கிள் ரிக்சாக்களை வழங்கி யது.

தேசியக் கொடி ஏற்றும் உரிமை! பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்!

இந்தியாவில் முதன் முதலாக, மாநில முதலமைச்சர்கள் சுதந்திரத் தினத்தன்று தேசியக் கொடியை ஏற் றும் உரிமையை பெற்றுத் தந்தார்.

சேலம் உருக்காலை அமைத்துக் கொடுத்தார்.

சென்னையில் வள்ளுவர் கோட் டம்.

குடிசை வீடுகள் அடுக்கு மாடி களாக மாற்றும் குடிசை மாற்று வாரி யம்.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகம்.

சென்னை வள்ளுவர் கோட்டம்.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல் கலைக் கழகம்.

தருமபுரியில் மகளிர் சுய உதவிக்குழுக்கள்.

தந்தை பெரியார் நினைவு சமத் வபுர புரங்கள்.

குமரி முனையில் 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை.

மீஞ்சூரில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்.

ஒமந்தூரார் தோட்டத்தில் புதிய தலைமைச் செயலகம்.

1975 - திருக்கோயில்களில் கருணை இல்லங்கள்!

1975-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் நாள் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் தந்து, கல்வி தந்து ஆளாக்கிடும் அரிய திட்டமாகத் தொடங்கப்பட்ட திருக்கோயில்க ளில் கருணை இல்லங்கள் எனும் திட் டப்படி கருணை இல்லம் ஒன்றைத் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீசுவரர் கோயிலில் குன் றக்குடி அடிகளார் முன்னிலையில் 2.6.1975 அன்று கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

2006 - அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்!

தந்தை பெரியார் அவர்களின் எண்ணத்தை இதயத்திலே தாங்கிய கலைஞர் அரசு இந்து சமய அறநிலை யத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் இந்துக்களில் தகுதி வாய்ந்த பயிற்சிபெற்றுள்ள அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று 23.5.2006 அன்று அரசாணை பிறப்பித்தது.

கிராமங்களுக்கு மின் வசதி!

1975-இல் கணக்கெடுப்பின் படி தமிழகத்தில் 62,487 கிராமங்கள் இருந்தன. அப்போதெல்லாம் கிரா மங்களுக்கு மின் வசதி கிடையாது. கிராமங்களுக்கு மின் வசதி திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங் களுக்கும் மின் வசதியை கலைஞர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார். 31.12.1975 இல் மொத்த மின் வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை 61,337 ஆகும். அப்போது 98.5 சதவீதம் கிராமங்கள் மின் வசதி பெற்றன.

குடிசைக்கோர் மின் விளக்குத் திட்டம்!

குடிசைக்கோர் மின்விளக்கு என்ற திட்டம் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. இதன்படி 1989 முதல் 1990 வரை 40 ஆயிரம் குடிசை வீடுகளுக்கு மின் இணைப்பு என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 42 ஆயி ரத்து 284 குடிசைகளுக்கு மின் விளக்கு கொடுக்கப்பட்டது. அதே போன்று 1990-1991 வரை 45 ஆயிரம் குடிசைகளுக்கு மின் விளக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இலக்கை தாண் டியும் குடிசைகளுக்கு மின் விளக்கு அமைக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்!

இந்தியாவிலேயே எங்குமில்லாப் புதுமையாக தமிழ்நாடு விவசாயிகள் அனைவருக்கும் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் பம்புசெட்டு களுக்கான மின்சாரத்தை 1.9.1990 முதல் இலவசமாக வழங்குவது என்ற முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17 .11.1990 அன்று அறிவித்தார்.

பட்டம்படிப்பு வரை மகளிர்க்கு இலவச கல்வி!

கலைஞர் அவர்கள் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு ஏழை மக ளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட் டத்தை 1989 -1990-ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தினார். சாதி மத பேதங்கள் ஏதுமின்றி 24,000 ரூபாய் ஆண்டு வருமானத்திற்குட்பட்ட ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட நடுத் தரப்பிரிவு குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கினார். இத் திட்டம் 2006-2007 இல் பட்ட மேற்படிப்புக்கும் விரிவு படுத்தப் பட்டது.

பள்ளிகளிலும் - கல்லூரிகளிலும் கணினிப் பாடம்!

இந்தியாவில் கணினியின் செல் வாக்கு அப்போது அவ்வளவாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், முதல்வர் கலை ஞர் முன்னிலையில் துவக்கி வைத் தார். இன்றைக்கு இத் திட்டத்தை செயல்படுத்தாத மாநிலங்களே

சென்னை தலைமையிலே அமையப்பெற்ற தடம் புதிதாக.

இல்லை என்று சொல்லலாம். அது மட்டுமல்லாமல் ஒன்றிய அரசும் காப்பீட்டுத் திட்டத்தை கொண்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

தை 1 - தமிழ்ப்புத்தாண்டு!

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத்திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப்பத்தாண்டு தொடக்கம் என் பது ஒட்டு மொத்தமாக எல்லாத் தமி ழறிஞர்களும் ஒப்புக்கொண்டு தீர் மானம் போட்டனர். அதனை ஏற்று தைத்திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்று அறி வித்து நடைமுறைப்படுத்திட கலை ஞர் அரசு முடிவு செய்துள்ளது என்று 23.1.2008 அன்று தமிழக சட்டப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரை யில் அறிவித்ததுநினைங்க, 1.3.2008 அன்று சட்டப்பேரவையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம்!

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவை முன்னிட்டு தமிழ்நாட்டில் என்றென்றும் பேரறிஞர் அண்ணா பெயர் நிலைத்து நிற்கும் வகையில் அதுவும் மாணவச் செல்வங்களுக்கு பயன்படுகின் வகையில் கலைஞர் அவர்களின் நிந்தனையில் உதித்த திட்டத்தான் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்.

இந்நூலகம் 15.9.2010 அன்று கோட்டூர்புரத்தில் திறந்து வைக்கப் பட்டது.

மருத்துவ நுழைவுத் தேர்வு ரத்து!

மருத்துவம் அப்போது தொழிற்கல்வி யில் சேருவதற்கு அப்போதெல்லாம் நுழைவுத் தேர்வுகள் இருந்தது. அத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் தான் டாக்டராகவோ, இன்ஜினியராகவோ படிக்க முடியும், இதில் ஏழை எளிய மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதினை அறிந்த கலைஞர் அவர் கள், இத் தேர்வை ரத்து செய்தார். பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தி நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

ஆனால் தற்போது பாசிச பா.ஜ.க. ஆட்சியில் நீட் என்னும் கொடிய நுழைவுத் தேர்வு தலைதூக்கி விட்டது.

தமிழ் வளர்ச்சிக்காக தனித்துறை!

தமிழ் வளர்ச்சிக்காகவே கலைஞர் அவர்கள் தமிழ் ஆட்சிமொழி மற் றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக் காக ஒரு தனி அமைச்சகத்தை புதிய தாக உருவாக்கி இத் துறையானது 13.5.1996 முதல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இலவச வண்ணத் தொலைக்காட்சி!

2006-2011ஆம் ஆண்டு ஆட்சியில் கலைஞர் அவர்கள் இந்தியா விலேயே யாரும் செய்து தர முடி யாத திட்டம் தான் இரண்டு கோடி குடும்பத்தினருக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டத் தினை முதல்வர் கலைஞர் அவர்கள் செயல்படுத்தி வெற்றி கண்டார். அதில் மின்சாரம் இல்லாத 5 இலட் சத்து 13 ஆயிரத்து 728 குடும்பங்க ளுக்கும் இலவச மின் விளக்கு வழங்கி அவர்களுக்கு வண்ணத் தொலைக் காட்சியை கண்டு களிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நிலம்தற் விவசாயிகளுக்கு இலவச நீரும்!

அதே போன்று நிலம்தற் ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் நிலங்களை வழங்கியது மட்டுமின்றி அவர்களுக்கு இலவச மின் சாரமும் வழங்கினார் கலைஞர் அவர்கள்.

சென்னையில் 50 ஆண்டு கடந்த அண்ணா மேம்பாலம் மற்றும் 10 மேம்பாலங்கள்!

சென்னையில் 1974-ஆம் ஆண்டு முதன் முதலாக கலைஞர் அவர்க ளால் ஆசியாவிலேயே மிகப் பெரிய மேம்பாலமாக அண்ணா மேம்பா லம் கட்டப்பட்டது. 50 ஆண்டுகள் கடந்தும் இன்றும் கம்பீரமாக அழ குற காட்சியளித்து மக்கள் பயன் பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரு கிறது. நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் ஆங்காங்கே அதிகரித்த வண் ணமிருந்தது. இதன் காரணமாக தற் போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேயராக பொறுப்பேற்று இருந்த 1996-2001ஆம் ஆண்டில் சென்னையில் 10 மேம்பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டு திறம்பட கட்டப்பட்டன.

1997 - சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி!

இந்தியாவிலேயே முதன்மையான திட்டம் அதுவும் பயனுள்ள திட்ட மொன்று உண்டென்றால் அது சட் டமன்ற உறுப்பினர் தொகுதி மேம் பாட்டு நிதி ஒதுக்கீட்டைச் சொல்லலாம். முதன் முதலில் இத் திட்டம் 1997-ஆம் ஆண்டு 5.3.1997-ஆம் நாளன்று 1997-1998-ஆம் ஆண் டிற்கான நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூபாய் 25 இலட்சம் என்று அப்போது அறிவித்தார்.

இது தான் தற்போது பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வது மட்டுமல்லாமல் நாடாளுமன் றத் தொகுதி மேம்பாட்டு நிதி என்ற பெயரில் எம்.பி. தொகுதி மேம் பாட்டு நிதியும் மத்தியில் அறிமுகப் படுத்தப்பட்டு தற்போது வரை செயல் படுத்தப்பட்டு வருகிறது என்பதினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1996 - சிருஷ்ணா நதி நீர்த் திட்டம்!

சென்னை மக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி கிடைப்பதற்கான காரணம் கிருஷ்ணா நதி நீர்த் திட்டமாகும். இத்திட்டத்தினை திறம்பட முடித்த பெருமை கலைஞர் அவர்களையே சேரும். முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நான்காம் முறையாக முத லமைச்சராப் பொறுப்பேற்ற போது, இடையில்

(அ.தி.மு.க. ஆட்சியில்) இத்திட் டம் செயல்படுத்தப்படாமல் நின்று இருந்ததால் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எப்பாடுபட்டேனும் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு கொண்டு வரும் திட்டத்திற்காக ஆந்திரா மாநில அரசோடு அப்போது முதலமைச்சராக இருந்த சந்திரபாபு நாயடு அவர்களோடு கலந்து பேசி,

தமிழ்நாட்டில் ஆங்காங்கே சீரிதாக தொழிற்பேட்டைகளை அமைத்தவர்.

இத்திட்டத்தை விரைவிலே நிறை வேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

29.9.1996-ஆம் ஆண்டு ஆந்திர எல்லையைக் கடந்து தமிழக எல்லை யில் ஊத்துக்கோட்டை வட்டம், தாமரைக்குப்பம் அருகே தண்ணீர் வந்து சேர்ந்தது. இன்றும் கிருஷ்ணா நதியில் இருந்து சென்னை மாநக ருக்கு தண்ணீர் வந்து கொண்டிருக் கிறது. சென்னை மக்களின் தாகத்தை தீர்ப்பதில் கலைஞர் அவர்களின் முயற்சியால் கொண்டு வரப்பட்ட கிருஷ்ணா நதி நீர்தான் இன்றும் பெரும் பங்கு வகிக்கிறது.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

தருக்கி நாட்டமாட்டு, புத்தரச நல் லூர் மற்றும் கடியாகுறிச்சி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றின் நீரை தாரமாகக் கொண்டு இராமநாதபு ரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 5 நகராட் சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களைச் சேர்ந்து 3163 ஊரக குடியிருப்புகளைச் சேர்ந்த லட்சக்க ணக்கான மக்கள் பயன்பெறக் கூடிய வகையில் அமைக்கப்பட்டது தான் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமாகும். இத் திட்டம் 1.12.2006-இல் ரூபாய் 630 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டது.

2008 - ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட் டங்களில் நிலத்தடி நீர் ஃப்ளோரை டால் பாதிக்கப்பட்டு பல்வேறு பிரச் சினைகள் மக்களுக்கு ஏற்பட்டது. இப்பிரச்சினைக்கு தீர்வாகத்தான் கலைஞர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றினார்.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்!

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் நிலமற்ற ஏழை விவசாயிகள், கிராமப்புற கைவினைஞர்கள், இலங்கைத் தமிழ் மக்கள், முதியோர் உதவித்தொகை பெறுவோர் ஆகியோருக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட் டத்தை 1989-1990-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தி னார். அதற்குரிய அணையை 3.10.1989 அன்று பிறப்பிக்கப்பட்டது.

தொழிலாளர் தினமான மே 1 விடுமுறை தினம், மே தின நினைவுச் சின்னம்!

கலைஞர் அவர்கள் முதன் முத லாக சட்டமன்றத்தில் குரல் கொடுத் தது விவசாயத் தொழிலாளர்களுக் கான கூலி பிரச்சினை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அன்று தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்த கலைஞர் அவர்கள்தான் உழைக்கும் தொழிலாளர்களுக்கான தொழிலாளர் தினமான மே 1-ஆம் தேதியை சம்பளத்துடன் கூடிய விடு முறை தினமாக தமிழ்நாடு மட்டு மின்றி இந்தியா முழுவதும் அறிவிக் கச் செய்தார். இப்பெருமை முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களையே சேரும். மே தினத்தை குறிக்கும் வகை யில், சென்னை நேப்பியர் பூங்காவில் மே தின நினைவச் சின்னத்தை அமைத்தது மட்டுமின்றி அப் பூங்கா விற்கு மே தின பூங்கா என பெயர் சூட்டிய பெருமையும் கலைஞர் அவர்களுக்கே உண்டு.

மைடோரா ரயில் திட்டம்!

இப்போது சென்னை மாநகர மக் களின் மிகவும் விரைவாக பயணிக்கும் போக்குவரத்து ஒன்று உண்டென் றால் அது மெட்டோ ரயில் ஆகும். இத் திட்டத்திற்கு ஆரம்ப காத்தா கலைஞர் அவர்கள்தான். கலைஞர் அவர்களின் உத்தரவின் படி மெட்டோ இத்திட்டத்தை செயல்படுத் தியவர் தற்போதைய முதல்வரும், அப்போதையதுணை முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள்தான். இந்த மெட்டோ ரயில் இன்றைக்கு சென்னை மாநகரம் முழுவதுமட்டு மல்ல; பூவிருந்தவல்லி, கிளாம்பாக்கம், பரந்தூர் என்று இதன் பணி விரிவ டைவதைப் போலவே கோவை, மது ரையிலும் மெட்டோ ரயில் தொடங் கிட திட்டங்கள் தயார் நிலையில் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் ஆரம்ப வித்து கலைஞர் அவர்கள் போட்டதுதான்.

இந்தியாவிலேயே முதன் முதலாக உருவான தகவல் வழும் உரிமைச் சட்டம்!

1997-ஆம் ஆண்டில் இந்தியா விலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில்தான் கலைஞர் அவர்களால் தகவல் பெறும் உரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. 17.4.1997 அன்று அறிமுகம் செய்யப்பட்ட இதற்கான சட்ட முன் வடிவ 30.4.1997 பேரவையில் நிறைவேற்றப் பட்டது. இதன் பிறகு தான் கோவா, ராஜஸ்தான், கர்நாடகா, மகாராஷ் டிரம், மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் மட்டும் அல்ல மத்திய அரசும் இச் சட்டம் கொண்டுவரப் பட்டது.

போர்ச்சாலை பெருமைப்படுத்திய கலைஞர்!

காவல் துறையில் காவலர்கள் சொல்ல முடியாத அளவிற்கு மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஊதியமும் குறைவு மட்டுமல்லாமல் அவர்கள் அணிந்திரு ந்த சீருடையோ சொல்ல முடியாத அளவிற்கு இருந்தது. காக்கியில் கோணியிபையில் தைத்துத் போன்ற அரைகால் டவுசர், சர்ட், சிவப்பு தொப்பி என்று இருந்தது. அந்தக் காலத்தில் போலீசார் எந்த நிலையில் இருந்தார்கள் என்பதற்கு இந்த அவல நிலையை மாற்றிய பெருமை கலைஞர் அவர்களையே சேரும். ஆம் போலீசாருக்கு டெரிகாட் னில் புள் பேண்ட், சர்ட், பூட்ஸ்க்கு பதிலாக ஷூ, நவீன தொப்பி வழங்கி காவல் துறைக்கு கம்பீரத்தை ஏற் வாக்கி கொடுத்து மட்டுமின்றி அவர் களுக்கு ஊதியம் குறித்து அற்காண கமிஷன்களை அமைத்து அக் கமிஷ னின் பரிந்துரைகளை நிறைவேற்றி காவல்துறைக்கே கம்பீரத்தை கொடுத்தவர் கலைஞர் அவர்கள்.

முதன் முதலில் இந்தியாவிலேயே பெண் காவலர்களை நியமித்த பெரு மையும் கலைஞர் அவர்களையே சாரும்.

அருந்ததியினர் - இஸ்லாமியர் களுக்கு இட ஒதுக்கீடு!

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர் களின் 30 சதவிகித இட ஒதுக்கீட்டி லிருந்து பிற்படுத்தப்பட்ட இஸ்லாமி யர்களுக்கென தனியாக உள்ஒதுக்கீ டாக 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கினார். அதே போன்று அருந் ததி இனத்தவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கி அவர்கள் வாழ்வில் முன்னேற வழி வகுத்துக் கொடுத் தார் கலைஞர் அவர்கள்.

மாற்றுத் திறனாளிகளுக்கு நலிந்த துறை!

மனித சமுதாயத்தில் காது கேளா தவராய், கண் தெரியாதவராய், வாய் பேச முடியாதவர்களாய், கை கால்க ளைப் பயன்படுத்த இயலாதவர்க

பார்பிபாழும் வகையில் கலைஞரால் அமைக்கப்பட்ட பேருந்துகள் அனைவரும் ஒருமகம்!

ளாய், மன நோயாளிகளாய் உள்ள அனைவரையுமே ஊனமுற்றோர் என்பதற்குப் பதிலாக ஓர் அவயத் தின் செயல்பாட்டுக் குறையால் அவர்களுடைய மற்றைய திறன் மேலும் ஒரு பங்கு சிறப்புக்குரியது என்ற அடிப்படையில் அவர்களை மாற்றுத்திறனாளிகள் என்று அழைக் கின்ற முறை குறித்து 2007-ஆம் ஆண் டு டேவே ஐக்கிய நாடுகள் அவையில் விவாதிக்கப்பட்டது. அது மட்டு மின்றி உடல் ஊனமுற்றோர் என்று அழைக்கப்பட்டவர்களை அவர்க

குமரி முனையில் 133 அடியில் அய்யன் திருவள்ளுவர் சிலை

ளுக்கென்று தனி இறமை உண்டு என் பதினால் அவர்கள் மாற்றுத்திறனாளி கள் என்று அழைக்கப்படுவோர்கள் என்று அறிவித்து மட்டுமின்றி மாற்றுத்திறனாளிகள் என்ற தனித்துறையையும் உருவாக்கினார்.

பெண்களுக்கு சொத்துரிமை!

1929 ஆம் ஆண்டு பிப்ரவரி 17, 18 ஆகிய நாள்களில் நடந்த பெரியார் நடத்திய செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் மட்டு மோ மாநில அமைப்பு ரீதியாகக் கொண்டு மாநிலமாகத் தமிழ்நாட்டில், பெண்களுக்குச் சமத்துவம் அளிக்கும் வகையில் இந்து ஆண்களுக்கு உள் ளது போலவே இந்து பெண்களுக் கும் மூதாதையர் சொத்தில் சம சொத்துரிமை வழங்கும் தனிச்சட் டமேசார சட்டப்பேரவையில் 13.2.1989 அன்று கொண்டு வரப் பட்டு 1989 ஆம் ஆண்டு மே இங்கள் 6 ஆம் நாள் தமிழக சட்டமன்றத்தில் கலைஞர் அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

சமூக சீர்திருத்தம் – சமூக நீதி – சமத்துவம் ஆகிய இலட்சியங்களை, வழிகாட்டும் ஒளி விளக்குகளாகக் கொண்டு இயங்கியவர் கலைஞர் !

அவர்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் கலைஞர் அவர் கள் வழங்கினார். குறிப்பாக 10 வகை யான பொருட்களை ரூபாய் 50க்கு ரேஷன் கடைகளில் கிடைக்கச் செய் தார். துவரம் பருப்பு, உளுந்து பொருட்கள் குறைந்த விலையில் ரேஷன் கடைகளில் கிடைக்கச் செய் த